V.V. Titanium Pigments Pvt. Ltd.,
A-81, Sipcot Industrial Complex,
South Veerapandiapuram PO,
Thoothukudi – 628002, Tamil Nadu, India

# தகவல் தெரிவிப்பவர் கொள்கை

## 1.0 முன்னுரை :

V.V.Titanium Pigments Private Limited (VVTi) தன் நிறுவனம் மற்றும் ஊழியர்களின் நடவடிக்கைகளை நிர்வகிக்க வேண்டிய கோட்பாடுகள் மற்றும் தரங்களை குறிக்கும் வர்த்தக நடத்தை மற்றும் நெறிமுறைகளின் குறியீட்டினை ஒற்றுள்ளது. ஏதேனும் சட்ட நெறிமுறைகளை யாரேனும் தேவையில்லாமலோ அல்லது வேண்டுமென்றோ மீறினால் அத்தகைய மீறல் நிறுவனத்தில் சீரிய விஷயமாகும். சட்ட நெறிமுறை மீறல்களை சுட்டிக்காட்டும் ஊழியர்களை முறைக்கேடுகள் செய்ய முடியாது. ஆகையால் தகவல் தெரிவிப்போர் கொள்கை, கம்பெனியில் ஊழியர்களின் மோசமான நடத்தை, சந்தேகத்திற்கிடமான மோசடி அல்லது ஒழுங்கற்றதன்மை சட்டபூர்வ அல்லது ஒழுங்கு முறை தேவைகளின் மீறல்களை வரன்முறைப்படுத்த தகவல் தெரிவிப்பவர்களுக்கு எந்த வித பயமும் பாதிப்பும் இல்லாமல் இருக்க வடிவமைக்கப்பட்டுள்ளது.

## 2.0 வரையறைகள் :

a) “நிறுவனம்” V. V. Titanium Pigments Private Limited (VVTi) நிறுவனத்தை குறிக்கிறது.

b) “பாதுகாக்கப்பட்ட வெளியீடு” என்பது தகவல் தெரிவிப்பவர் மூலம் நெறிமுறையற்ற நடத்தைகளை பற்றிய செயல்விளக்க தகவல்களை நன்நம்பிக்கையோடு அறியப்படுதல்.

c) “தகவல் தெரிவிப்பவர்” என்றால் இந்த கொள்கையின் கீழ் பாதுகாக்கப்பட்ட வெளியீடுகளை அளிக்கும் இயக்குநர், தொழிலாளிகள், வாடிக்கையாளர்கள், விற்பனையாளர்கள், வினியோகிஸ்தர்கள் அல்லது நிறுவனத்துடன் தொடர்புடைய மற்ற பங்குதாரர்களும் ஆவர்.

d) “ஒழுங்கு நடவடிக்கை” என்றால் விசாரனை முடிந்தவுடனோ அல்லது நடைபெற்று கொண்டிருக்கும் போதோ, எச்சரிக்கை, அபராதம் விதித்தல், அலுவலக கடமைகளிலிருந்து இடைநீக்கம் போன்ற நடவடிக்கைகள் அல்லது வேறு

ஏதாவது நடவடிக்கைகளை நிறுவனத்தின் நிர்வாகம் தவறின் தன்மைக்கேற்ப சரியெனக் கருதும் நடவடிக்கைகளை மேற்கொள்வது.

**3.0 கொள்கை யாருக்கு பொருந்தும் :**

இந்த தகவல் தெரிவிப்பவர் கொள்கை நிறுவனத்தின் இயக்குநர், தொழிலாளிகள், வாடிக்கையாளர்கள், விற்பனையாளர்கள், வினியோகிஸ்தர்கள் மற்றும் நிறுவனத்தின் மற்ற பங்குதாரர்களுக்கு பொருந்தும்.

**4.0 கொள்கையின் நோக்கம் :**

கீழ்கண்ட பிரச்சனைகள் இந்த கொள்கையின் கீழ் அடங்கும். அவை :

a. நிறுவனத்தின் சொத்துக்கள் மற்றும் வளங்களை மோசடி செய்தல்

b. நலன்களில் கருத்து வேற்றுமை

c. இரகசிய தகவல்களை முறைகேடாக கையாளுதல்

d. கொள்முதல் மோசடி செய்தல்

e. பரிசு பொருட்கள் மற்றும் கேளிக்கைகளை ஏற்றுக்கொள்ளுதல்

f. தவறான நிதி அறிக்கை அளித்தல்

g. பாலியல் துன்புறுத்தல்

h. லஞ்சம் மற்றும் ஊழலில் ஈடுபடுதல்

i. உள் வர்த்தகம் செய்தல்

j. வரி மோசடி செய்தல்

k. ஏதாவது ஒரு தன்மையில் துன்பப்படுத்துதல்

l. பழிவாங்குதல் அல்லது கொடுமைபடுத்துதல்

m. பாகுபாடு காணல்

n. அதிகாரத்தை தவறாக பயன்படுத்துதல்

o. சுற்றுச்சூழல், ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு வழிகாட்டுதல்களை மீறுதல்

p. ஒரே நேரத்தில் வேறு நிறுவனத்திலும் வேலை செய்தல்

**5.0 நிறுவனத்தின் பாதுகாக்கப்பட்ட வெளியீடு குறித்து தெரிவிக்கும் செயல்முறைகள் :**

a. இந்த செயல்முறையின்படி ஏதேனும் தவறு நிகழ்ந்தால் உடனே அதை தகவல் தெரிவிப்பவர் கொள்கையின்படி பாதுகாக்கப்பட்ட வெளியீட்டினை :

i. மின் அஞ்சல் : personnel@vvtipigments.com மூலம் நிறுவனத்தின் மேலிடத்திற்கு தெரியப்படுத்தலாம்.

ii. தபால் மூலம் கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பலாம்.

பெறுநர்

பொதுமேலாளர் - ஆப்பரேஷன்,
ஏ-81, சிப்காட் இன்ட்ஸ்ட்ரீயல் காம்ப்ளக்ஸ்
தெற்கு வீரபாண்டியபுரம்
தூத்துக்குடி – 628 002, தமிழ்நாடு, இந்தியா.

b. நிர்வாகத்தின் இயக்குனர் மற்றும் தொழிலாளர்களும் தங்களின் அடையாளாங்களை மறைத்து பாதுகாக்கப்பட்ட வெளியீடுகளாக, ASO அறை அருகிலுள்ள பரிந்துரை பெட்டியில் போடலாம். ஆனால் நிறுவனத்தின் வாடிக்கையாளர்கள், விற்பனையாளர்கள், வினியோகிஸ்தர்கள் மற்றும் பங்குதாரர்களிடம் தங்கள் அடையாளங்களை கட்டாயமாக தெரிவிக்க வேண்டும்.

**6.0 தகவல் தெரிவிப்பவரின் பாதுகாப்பு :**

a. நிறுவனத்தில் நிகழும் தவறுகள் மற்றும் தொழிலாளர்களின் தவறான நடத்தைகள் மேலும் மற்ற நிகழ்வுகள் அனைத்தும் தகவல் தெரிவிப்பவர் மூலம் நிர்வாகத்திற்கு தெரிவிக்கப்படுவதனால் அவரை பாகுபாடிலிருந்து, பழிவாங்குவதலிருந்து, தாழ்த்துவதிலிருந்து அல்லது எந்த நியாயமற்ற வேலை வாய்ப்பு நடைமுறைகளிலிருந்து பாதுகாப்பபது இந்த நிறுவனத்தின் நிர்வாகமே பொறுப்பு.

b. நிறுவனத்தில் ஏதேனும் விசாரனை நிகழும் பேது வெளிப்படையான முக்கியமான சாட்சியாகவோ அல்லது விசாரணைக்கு உதவுபவராகவோ ஒரு தனி நபர் ஆஜர்படுத்தபடும் போது அந்த நபருக்கு தகவல் தெரிவிப்பவருக்கு அளிக்கப்படும் பாதுகாப்பு போன்று பாதுகாப்பு அளிக்க வேண்டும்.

c. தகவல் தெரிவிப்பவர் ஏதேனும் பொய்யான குற்றச்சாட்டுகளை கூறும்போது அதனால் அவர்மேல் எடுக்கப்படும் ஒழுங்கு நடவடிக்கைகளில் இருந்து பாதுகாப்பினை இந்த கொள்கையின் கீழ் வழங்கப்படமாட்டாது.

d. தகவல் தெரிவிப்பவரின் மேல் தவறான நடத்தையின் கீழ் ஏதேனும் ஒத்த அல்லது தனித்த புகார்கள் அல்லது குற்றசாட்டுகள் இருப்பின் இந்த கொள்கையின் கீழ் அவருக்கு பாதுகாப்பு கிடையாது. விசாரனை போது புகார்தாரரும் குற்றம் புரிந்தவர் என்று கண்டறியப்பட்டால் நிறுவனம் சுயேட்சையாக அதனை கையாளும்.

**7.0 மறை வெளியீடுகளை கையாலும் செயல்முறை :**

a. ஒரு புகாரை பெற்றவுடன், ஆரம்ப விசாரனை மேற்கொண்டு விசாரணைக்கு ஏற்ற புகார்தானா என்பதனை முடிவு செய்ய வேண்டும். அப்படி ஆம் என்றால் எப்படி அதனை வடிவம் செய்வது என்பது குறித்து முடிவு செய்ய வேண்டும். சில புகார்களை விசாரனை இல்லாமல் ஒப்புதல் நடவடிக்கை மூலம் தீர்க்கலாம்.

b. புகாரை மதிப்பிடு செய்தபின்பு, நிறுவனம் புகார்தாருக்கு எழுத்து மூலம் கீழ்கண்டவற்றை தெரிவிக்கும் :

i. புகார் பெற்று கொண்டதை அத்தாட்சி செய்தல்.

ii. அதனை கையாளும் முறையை பற்றி முன்மொழி குறியீடு செய்தல்.

iii. மேலும் விசாரனை நடைபெறுதல் பற்றிய தகவல்கள் அப்படி விசாரனை நடத்தவில்லை என்றால் ஏன், எதற்கு நடத்தவில்லை என்பதினை குறித்த தகவல்கள்.

c. பிரச்சனையின் தன்மை அதில் அடங்கியிருக்கும் சிரமங்கள் மற்றும் தகவல்களில் உள்ள தெளிவு போன்றவற்றை சார்ந்தே புகாரை கையாளும் நிறுவனத்திற்கும் புகாதாருக்கும் உள்ள தொடர்பு அளவு இருக்கும். தேவைப்பட்டால் புகார்தாரரை நாடி கூடுதல் தகவல்கள் பெறப்படும்.

d. தகவல் தெரிவிப்பவர் இந்த கொள்கையின் கீழ் தெரிவித்ததன் விளைவாக அவருக்கு ஏதேனும் பிரச்சனைகள் ஏற்பட்டாலோ அல்லது அவர் பழிவாங்கப்படலாம் என்ற நிலை ஏற்பட்டால் நிறுவனம் அவரை பாதுகாப்பதற்கு

தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

e. தகவல் தெரிவிப்பவர் பிரச்சனைக்குரிய / விஷயத்தை சரியாக தெளிவாக தெரிவித்துள்ளர் என்பதனை அவரிடம் உறுதிபடக் கூறுவதற்கு தேவையான நடவடிக்கைகளை நிறுவனம் ஏற்றுக் கொண்டு செயல்படும்.

VVTi